... M. 6311 ★ தொலைபேசி: 51331 சிறப்பிதழ்: 1958 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆடி 3 (18—7—68) வியாழன் ★ வெளியூர்: ஆடி 4 (19—7—68) வெள்ளி [இதழ்: 29

சுதந்தரத்துக்குப் பின் முதல் நிகழ்ச்சி!

இந்தியா விடுதலை பெற்ற பின் முதல் முறையாகத் தேசிய அளவில் கல்விக் கொள்கை பற்றிய தீர்மானம் ஒன்றை மத்திய அரசு உருவாக்கிஒப்புதல் அளித்திருக்கிறது 1884-ம்ஆண்டுஇந்தியாவில் ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் முதன்முறையாகக் கல்விக் கொள்கை பற்றிய தீர்மானம் உருவாக்கப்பட்டது; அதற்குப் பின், 1904, 1913 ஆகிய ஆண்டுகளில் இரண்டாவது, மூன்ருவது முறையாகக் கல்விக் கொள்கை பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மும்மொழித் திட்டம் ஒரு மோசடி!

தமிழகப் போலீசு சாதனே!

ஸ்காட்லாந்து யார்டு போலீசையும் மிஞ்சியது!

சென்னை, ஜூலை 17—

"புள்ளிவிவரங்களைக் கொண்டு பார்த்தால், மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில் போலீசுத்துறை எப்போதும் நல்ல பணி ஆற்றிவருகிறது.

"துப்பறிவதில் நிபுணர்கள் எனப் பெயர்பெற்றுள்ள 'ஸ்காட்லாந்து யார்டு' போலீசின் நிர்வாக அறிக்கையிலிருந்து, அவர்கள் 23 சதவிகித குற்றங்களைத்தான் கண்டுபிடித்துள்ளனர் என்பதும், அவையும் சாதாரணமானவையே என்பதும் தெரிய வருகிறது.

"ஆனால், இங்கு 75 சதவிகித குற்றங்களைத் தமிழகப் போலீசார் கண்டுபிடித்துள்ளனர்!

"இந்தியாவில் மிக அதிக சதவிகிதத்தில் குற்றங்களைக் கண்டுபிடித்துள்ளதும் தமிழகப் போலீசுதான்!

"போலீசுடன் மக்களும் ஒத்துழைப்புக் கொடுப்பதால், பல குற்றங்களைக் கண்டுபிடிக்க முடிகிறது!

"வட இந்தியக் கொள்ளைக் கூட்டத்தைப் பிடித்ததன் பயனாக நகரப் போலீசின் மதிப்பு உயர்ந்துள்ளது!

"மக்களுக்குத் தொடர்ந்து போலீசு, தனது உதவியைச் செய்துவரும் என்று உறுதி அளிக்கிறேன்.

"வாய்மொழியாகவும், எழுத்து மூலமாகவும், செய்தித் தாள்களில் 'ஆசிரியர் பகுதி'யில் வரும் கடிதங்கள் மூலமாகவும் தெரிவிக்கப்படும் புகார்களையும் போலீசு அக்கறையுடன் கவனித்து தகுந்த நடவடிக்கை எடுக்கிறது."

—போலீசுக் கமிஷனர்
பி. குப்புசாமி
(இலட்சுமிபுரம் இளைஞர் சங்கக் கூட்டத்தில்)

ஒருபோதும் இந்திக்கு அடிமையாகமாட்டோம்!

ஆதிக்கத்துக்கு வித்திடாமல் பேச்சு நடத்த வருக!

டெல்லிக்கு அமைச்சர் செ.மாதவன் எச்சரிக்கை

திண்டுக்கல், ஜூலை 18—

தமிழகச் சட்டத்துறை அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள், மதுரை மாவட்டம் வேடசந்தூரில் எம். ஜி. ஆர். மன்றம் – அண்ணு அறிவு வளர்ச்சி மன்றம் ஆகியவை சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் பின்வருமாறு டெல்லிக் காங்கிரசு ஆட்சியாளருக்கு எச்சரிக்கையும் வேண்டுகோளும் விடுத்தார்:—

"இன்று மொழிக் கொள்கையில், குழப்பம் நிலவுகிறது. 'மும்மொழிக் கொள்கை' என்பது நாட்டை மோசடி செய்யும் திட்டமாக இருக்கிறது!

"இந்தியைப் புகுத்தி மற்ற மொழிகளை அழிக்கத்தானே உங்கள் திட்டம்? உண்மையிலேயே ஆங்கிலத்தை விரட்டத்தானே உங்கள் மும்மொழிக் கொள்கை?

"இந்தி தேசிய மொழி என்பதை ஒருபோதும் ஒத்துக்கொள்ளமாட்டோம்! இந்தியத் துணைக் கண்டத்தில் மக்கள் சக்தியின் பின்னணியில் நின்று குரல் எழுப்பும் உங்கள் மொழிக்கு நாங்கள் அடிமையாகமாட்டோம்!

"எனக்குப் பெருமை வேண்டாம் --- என் தாய்த் தமிழுக்குப் பெருமை வேண்டும்! எனக்குப் பெருமை வேண்டாம் --- எங்கள் கட்சிக்குப் பெருமை வேண்டும்! உங்களோடு வாழ இருக்கிறோம் -- ஆனுல், உங்கள் மொழிக்கு நாங்கள் அடிமையாகமாட்டோம்!

"மொழி ஆதிக்கத்திற்கு வித்திடாதீர்கள்! மொழிக் கொள்கையில் கட்சிகளைப் புகுத்தாமல் பேச்சுவார்த்தை நடத்த முன்வாருங்கள்!"

இந்தியைத் திணிக்கப் புதிய முயற்சி

கல்விக் கொள்கைத் தீர்மானத்தின் மூலம் கட்டாயப்படுத்தப்படும்

இந்தியா முழுவதிலும் மும்மொழித் திட்டமாம்

புதுடில்லி, ஜூலை 18—

கல்வியின் தரத்தை உயர்த்தி -- எல்லாத் தரப்பினருக்கும் கல்விச் சலுகையை விரிவுபடுத்தி -- கல்விக் கொள்கையில் புதிய இலட்சியத்தை அடைகின்ற வகையில் தேசீய அளவில் கல்விக் கொள்கையை மத்திய அரசு வகுத்திருக்கிறதாம்!

"இளஞ்சிருர்களிடையே ஒழுக்கத்தை வளர்ப்பதற்காகத் தனி அக்கறை காட்டவேண்டும்" என்று மத்திய அரசு முடிவு செய்திருக்கிறதாம்!

இந்தக் கல்வி கொள்கைபற்றிய அறிக்கையை மத்திய அமைச்சரவை இரண்டு மணி நேரத்திற்கு மேல் விவாதித்ததாம்.

இந்த அறிக்கை, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தொடர்க் கூட்டத்தில் தீர்மான வடிவில் வைக்கப்படும் என்று தெரிகிறது.

உயர்நிலைப் பள்ளி அளவில் மும்மொழித் திட்டத்தைச் செயல்படுத்துவது என்ற கருத்து இத்தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறதாம்.

இத்திட்டத்தை எல்லா மாநில அரசுகளும் கட்டாயமாகச் செயல்படுத்தவேண்டும் என்றும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

இத்தீர்மானத்தின்படி. இந்தி பேசும் மாநிலத்தைச் சார்ந்தவர்கள் தென்னுட்டு மொழியைக் கட்டாயமாகக் கற்கவேண்டும் என்றும், அதே போல் இந்தி பேசாத மாநிலத்தைச் சார்ந்தவர்கள் ஆங்கிலத்தையும், வட்டார மொழியையும் கற்பதோடு இந்தியையும் கற்கவேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டிருக்கிறதாம்.

மாநில மொழிகள் விரைவில் வளர்க்கப்பட்டு அம்மொழிகள் பல்கலைக் கழகத்தில் பயிற்று மொழியாக ஆகவேண்டும் என்றும் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறதாம்; ஆனுல், இதற்கான சட்டம் எதுவும் இததீர்மானத்தில் குறிப்பிடப்படவில்லை எனத் தெரிகிறது.

இந்தி மொழியை வளர்க்க எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று இத்திர்மானத்தில் சிறப்பாக வலியுறுத்தப்பட்டிருக்கிறதாம்.

நாட்டினுடைய கலாச்சார ஒற்றுமையை நிலைநாட்ட சமஸ்கிருதப் பயிற்சி அளிப்பதற்கும் இத்தீர்மானத்தின் முக்கிய இடம் அளிக்கப்பட்டிருக்கிறதாம்.

உலக அரசியல் விவகாரங்களை அறிந்துகொள்வதற்கு அனைத்து நாட்டு மொழிகளையும் ஆங்கிலத்தையும் கற்பதற்கான அவசியம் பற்றியும் தீர்மானம் வலியுறுத்துகிறதாம்.

நாட்டில் நடந்திராத அதிசயம்!

பாலத்தை விழுங்கியது எது?

பானஜி, ஜூலை 18—

கோவாவில் ஒரு கிராமத்திலிருந்த பாலம் மர்மமாக மறைந்துவிட்டது குறித்து விசாரணை நடத்துமாறு முதலமைச்சர் பண்டோட்கர் உத்தரவிட்டிருக்கிருர்!

நாட்டிலேயே இம்மாதிரி நடந்திருப்பது இதுதான் முதல் தடவை யென்றும், எனவே தீர விசாரிக்குமாறு உத்தரவிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பாலம் கட்டப்பட்டு அதை அதிகாரிகள் பார்வையிட்டதாகவும் போக்கு வரத்துக்கு அது திறந்து விடப்பட்டதாகவும் பதிவேடுகளில் காணப்படுகிறது; ஆனுல், அந்த இடத்தில் பாலம் இருந்தகற்கான அறிகுறியே இல்லை!

ஆக்கவேலைக்குச் சிறைக் கைதிகள்

உணவு உற்பத்திப் பணியில் ஈடுபடுத்தத் தமிழக அரசு திட்டம்

மூன்று வேளாண்மைப் பண்ணைகள் ஏற்படும்

சென்னை, ஜூலை 17—

தண்டனை பெற்ற கைதிகளைப் பயன்டுத்தி விவசாயம் செய்வதற்காகச் சென்னைக்கு அருகிலும், தஞ்சையிலும், மதுரையிலும் மூனறு விவசாயப் பண்ணைகளை ஏற்படுத்தத் தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது இந்தப் பண்ணைகள் தலா 300 ஏகரைக் கொண்டதாக இருக்கும்.

நீண்ட நாள் தண்டனை பெற்ற விவசாயம் தெரிந்த கிராமவாசிகளைச் சீர்திருத்துவதற்காக இந்த மூன்று பண்ணைகளும் அமைக்கப்படுகின்றன.

இத்தகவலை, சிறைச்சாலைகளின் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் பி. எல். ஸ்ட்ரேசி தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"ஒவ்வோர் ஆண்டும் சிறையில் இரண்டரை இலட்சம் கைதிகளைப் பராமரிக்க வேண்டியிருக்கிறது. இவர்களுக்காக ஆண்டிற்கு ரூ. 20 இலட்சம் செலவாகிறது.

சிறைக் கைதிகள் செய்யும் பொருட்கள் மூலம் சுமார் ரூ. 50,000-தான் வருமானம் வருகிறது.

சிறைக் கைதிகளில் மூன்றில் ஒரு பகுதியினர் விசாரணையில் உள்ளவர்கள்; மற்ருெரு பகுதியினர் குறைந்த காலத் தண்டனை பெற்றவர்கள்; மீதமுள்ளவர்கள் நீண்டகாலச் சிறைத் தண்டனை அனுபவிப்பவர்கள்.

ஒவ்வொரு கைதிக்கும் தலா ரூ 2 செலவிட வேண்டியிருக்கிறது; இதில் நிர்வாகச் செலவு சேரவில்லை."

மருத்துவமனையில் சிகிச்சை பெறும் மாணவர்

அண்ணு சென்று பார்த்தார்

சென்னை, ஜூலை 17—

தமது உடல் நிலையைப் பரிசோதனை செய்துகொள்ளப் போது மருத்துவமனைக்குச் சென்ற முதலமைச்சர் அண்ணு அவர்கள், பஸ் தொழிலாளர்—மாணவர் மோதுதலின்போது காயமடைந்து இன்னும் மருத்துவமனையிலேயே தங்கிச் சிகிச்சை பெற்றுவரும் பரீட்சார்த் என்ற மாணவரைச் சென்று பார்த்து, அவரது உடல் நலம் பற்றி விசாரித்தார்.

சமுதாயச்சீர்திருத்தத்துக்கு எதிரிகளே காங்கிரசார்!

நீதிக் கட்சி ஆட்சியில்தான் தாழ்த்தப்பட்ட—பிற்பட்ட மக்கள் உரிமை பெற்றனர்

தீண்டாமையை எதிர்த்துப் பெரியாரும் அண்ணுவும்தான் போராடினர்

மாயூரம்—மணல்மேடு சமுதாயச் சீர்திருத்த மாநாட்டில் ஏ. வி. பி. ஆசைத்தம்பி உரை

“நீதிக் கட்சி தந்த வகுப்புவாரி உரிமையால்தான் பிற்பட்டவர்களுக்கு—தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரசியலில் பங்கு விகித உரிமை கிட்டியது.

“அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டபோது டாக்டர் அம்பேத்கார் பிடிவாதமாக நின்று தாழ்த்தப்பட்டவர்கட்கு வகுப்பு விகித உரிமைக்கு உறுதி செய்தார். காங்கிரசு அதைச் செய்ததா ?

“சேரிக்குள் சென்று அம்மக்களுடன் தோழர்களாகப் பழகிச் சமத்துவம் ஏற்படச் செய்தவர்கள் நாங்கள்; எங்களைப் பார்த்த பிறகே பங்களாவாசிகள், ஓட்டுக்காக அவர்கள்முன் வந்தனர்! அப்படி அவர்களை வரச்செய்தவர்கள் நாங்கள்தான்!

“தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தபின், ஆதித்திராவிட மக்களுக்கு அதிகச் சலுகைகள் அளித்துவருகிறது; இனியும் அண்ணுவின் ஆட்சி அதனைச் செய்யும்.

“இங்கு சமூக சமத்துவம் ஏற்படச் செய்து சமுதாயத்தை மாற்றியமைப்போம்; திராவிட இயக்கம் செய்துள்ள நன்மைகளுக்கு நன்றி காட்டும் முறையில், நீங்கள் அண்ணு ஆட்சிக்கு உறுதுணையாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன”

என்று, சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், 12—7—68 அன்று மாயூரம்—மணல்மேட்டில் நடந்த சமுதாயச் சீர்திருத்த மாநாட்டுக்குத் தலைமைவகித்து உரையாற்றுகையில் கூறினர். அவர் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு :—

"அண்மையில் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்த அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா, தி. மு. கழகம் சிறிய கட்சி என்றும், அதற்கு நல்ல பரம்பரை கிடையாதென்றும், கொள்கை ஏதும் இல்லாததென்றும் இழித்துப் பேசினர்; யாரோ சொல்லியதைக் கேட்டுப் பேசியதாகவே அது இருக்கிறது.

தமிழக ஆட்சி இந்தியாவிலேயே நிலையான ஆட்சியாகவும், நல்ல ஆட்சியாகவும் நடத்தப்படுவதையும், அண்ணு ஆட்சியின் திறமையையும் உலகமே புகழுகிறது; இதை அறிந்துகொள்ளாதவர்போல் அவர் மழுப்பிப் பேசுகிருர்.

இந்த ஆட்சி திடீரென்று ஒரிசா லாட்டரிச் சீட்டு வெற்றிபோல் பதவிக்கு வந்துவிடவில்லை. தி.மு. கழகத்துக்குச் சிறந்த பாரம்பரியம் உண்டு; காங்கிரசைவிடப் பெரிய பாரம்பரியம் உண்டு; பல போராட்டங்கள்மூலம் படிப்படியாக மக்களிடம் ஆதரவு பெற்று ஆட்சிக்கு வந்துள்ளது.

வெள்ளையனை எதிர்த்துப் பதவி பெற்றது தவிர, காங்கிரசுக்குப் பாரம்பரியம் ஏது?

சமுதாயத்தில் பெரிய மாற்றம் தோற்றுவித்த பாரம்பரியத்தைப் பெற்றது தி. மு. கழகமே ஆகும்.

2,000 ஆண்டுகளுக்கு முன்பே சமுதாயத்தில் மாற்றம் காண முற்பட்டபோதிலும், புத்தரும் வள்ளுவரும் தோற்றுவித்த கருத்துக்கள் வெற்றி காணவில்லை!

1917-ம் ஆண்டுமுதல் திராவிடர் நலக் கட்சி இயக்கம் தோன்றி நடந்துவருகிறது; திராவிட இனத்துக்காகப் போராடிவருகிருேம்.

பெரியார் துவக்கிய இயக்கம் அண்ணுவின் துணையால் பெரிதும் வளர்ந்துள்ளது.

நீதிக் கட்சி ஆட்சிப் பொறுப்பேற்றது; இரட்டை ஆட்சியை வெற்றிகரமாக நடத்திக்காட்டி, 'திராவிடர்களுக்கு ஆளும் திறமை உண்டு' என்பதை வெளிப்படுத்தியது!

மக்களை முன்னேற்ற—அவர்களின் தன்மானம் பறிபோவதைத் தடுத்துத் தன்மதிப்பும், மனித உணர்வும் பெறச்செய்யப் பெரியார் 1924-ல் சுயமரியாதை இயக்கம் தோற்றுவித்தார்.

பகுத்தறிவு இயக்கம் துவங்கிய தற்குப் பின்னர்தான் மக்களிடையே விழிப்பு ஏற்பட்டது.

வெளிநாடுகளில் சமுதாயச் சீர்திருத்தம் என்ருல் அது கடினமானதல்ல; நமது நாட்டில் அது எதிர்நீச்சல் போன்றது!

'மக்களுக்குத் தெளிவு வேண்டும்; சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வு கூடாது' என்பதைப் பெரியார்தான் முதன்முதலாக வலியுறுத்திப் பேசிவந்தார்.

ஆனல் அவர் கட்டிக்காத்த காங்கிரசு, அவருடைய சீர்திருத்தக் கருத்துக்களை ஏற்காமல் புறக்கணித்ததால், பெரியார் காங்கிரசை விட்டே வெளியேற நேரிட்டது!

காங்கிரசார், 'சுயராஜ்யம் வந்தால்போதும்; எல்லாம் சரியாகும்' என்று கூறினர்!

கம்யூனிஸ்டுகள், 'பொருளாதாரத்தில் சமநிலை ஏற்பட்டால் போதும்' என்றனர்!

பெரியாரும், அண்ணுவும், 'முதலில், மனிதச் சமுதாயத்தில் பேதத்தை அகற்றியாக வேண்டும்' என்பதை வலியுறுத்தி வந்தனர்!

கம்யூனிஸ்டுகள், மேல்நாட்டுக் கம்யூனிஸ்டுகளை காப்பி அடித்துப் பேசிவந்தனர்—வெற்றி காணவில்லை!

சமுதாயச் சமத்துவமின்றிப் பொருளாதாரச் சமத்துவம் பயனில்லை!

உலகில் வேறு எங்கும் இவ்வளவு பேதங்கள் இல்லை; இவ்வளவு ஏற்றத்தாழ்வுகள் கிடையாது. அங்கெல்லாம், தொழிலாளி—முதலாளி, பணக்காரன்—ஏழை என்ற பேத நிலை மட்டுமே நிலவியது; இங்கோ சாதிப் பிரிவுகள் ஏராளம்! ஆதித்திராவிடர் என்பதிலேயே பல நூறு பிரிவுகள்! பிறப்பினுலேயே ஏற்பட்ட எண்ணற்ற சாதிப் பிரிவுகள்!

படிக்கட்டு போல் ஒன்றைவிட உயர்ந்து, மற்றவரைத் தாழ்த்தியும் உள்ள வேற்றுமை நிலை! இவ்வித மோசமான ஏற்றத் தாழ்வுகள் மேல் நாடுகளில் இல்லை!

மேல்நாடுகளில், மக்களிடையே சமுதாய வித்தியாசமில்லாதிருந்தது; பணக்கார ஆணவம்—நிலப்பிரபுத்துவ ஆணவம் ஆகிய இரு வித்தியாசங்களே இருந்தன; அந்த வித்தியாசங்களுக்குத் தீர்வு கண்டதும், பிரச்சினை தீர்ந்துவிட்டது! அந்த முறையையே இங்கு பின்பற்ற கம்யூனிஸ்டுகள் முயன்றனர்.

காங்கிரசார் 'சுயராஜ்யம் கிடைத்தால் எல்லாம் நீங்கிவிடும்' என்றனர்; மாருக, சாதிகள் நிலைப்பதை ஓட்டு வாங்கப் பயன்படுத்திக் கொண்டனர்!

பெரியார், 'சமுதாயத்தை சாதி—மத—பேதமற்றதாக மாற்றியமைக்க வேண்டும்' என்ருர்; அண்ணுவும் அதற்காகப் பாடுபட்டார்; இதை, 'மதத் துவேஷம்' என அவதூறு செய்தனர்!

பெரியாரும் அண்ணுவும் சொன்னுர்கள்—மேல் நாட்டு நிலை வேறு—நம் நாட்டு நிலை வேறு; பொருளாதாரத்தில் எவ்வளவுதான் உயர்ந்தாலும், பிறவி இழிவு நிலை மாருமல் சமத்துவச் சமுதாய அமைப்பு ஏற்பட முடியாது; சமுதாயத்தையே அடியோடு மாற்றியாக வேண்டும்; இதை எதிர்க்கக் கடவுள் வந்தாலும், தகர்த்தெறியவேண்டும்' என்று!

பெரியார், கடவுளையே சாதாரணமாக்கிவிட்டார்! மக்கள் கருத்தில் மிகப் பெரிதாக நிலவிய 'கடவுள் செயல்' என்ற எண்ணத்தைத் தவிடுபொடியாக்கினுர்!

மக்கள் கடவுள் மீதும், சாத்திரங்கள் மீதும் வைத்திருந்த மூட நம்பிக்கைகள், பொய் மதிப்புக்கள் தளர ஆரம்பித்தன!

சமுதாயத்தில் தலைசிறந்த மாற்றம் இன்று ஏற்பட்டுள்ளது!

35 ஆண்டுக்கு முன்பு இருந்த சமுதாய நிலையை இன்று அடியோடு மாற்றியது காங்கிரசு அல்ல; பெரியாரும் அவரைப் பின்பற்றிய அண்ணுவுமே ஆவர்! காங்கிரசு இதற்கு எதிர்ப்பாகவே இருந்துவந்துள்ளது!

முன்பெல்லாம் மக்கள், பிறவி இழிவு காரணமாகத் தெருவில் நடக்கவும் அனுமதிக்கப்படவில்லை—அவர்களுக்கு அந்த உரிமை கிடையாது!

பெரியாரும் அண்ணுவும் இருபது ஆண்டுகளுக்கு முன்பு இந்த உரிமையைப் பெற எதிர்ப்புக்களையும், அடி, உதைகளையும் ஏற்று—கோயில் நுழைவுப் போராட்டம் நடத்தி—சமத்துவப் புரட்சியை ஏற்படுத்தினர்!

அப்போதெல்லாம் தி மு கழகம், பதவி பற்றிச் சிந்தித்ததே இல்லை! 'தேர்தலுக்கு நிற்கக் கூடாது' என்பது கட்சியின் கொள்கையாக இருந்தது!

தி. மு. கழகம் சமுதாயத்தில் எந்தவிதப் பலனையும் எதிர்பார்க்காமல்—பதவியைக் கோராமல்—சமுதாயத்தின் மேம்பாட்டுக்காகவே பாடுபட்டு வந்தது!

சாதிகளை, சமுதாயத்தின் அடிதளத்திலிருந்தே ஒழிபபதற்குப் பாடுபடடுவந்தது!

ஒரு சில உயர் வகுப்பினரே சமுதாயச் சீர்திருத்தத்துக்கு எதிர்ப்புக் காட்டுகின்றனர்; ஆயினும் நாம் எவருக்கும் அஞ்சத் தேவையில்லை!

கல்விமூலம் மக்கள் மனதில் அறிவைப் புகட்டினுல் போதும்; கல்விமூலம்தான் தெளிவு ஏற்பட்டது; 1949-முதல் 1956 வரை நாம் சமுதாயப் புரட்சியே செய்துவந்தோம்.

காங்கிரசார் போட்டி இல்லாமலேயே பதவிக்கு வந்துகொண்டிருந்தனர்; அவர்களுக்குப் போட்டி ஏற்படும்வகையில் 1957-தேர்தலில் நாமும் நின்ருேம்; 15-பேர் சட்டமன்றம் வந்தோம்; காங்கிரசின் ஆணவம் இம்மாதிரி தடுக்கப்பட்டது—தடுக்கப்படவேண்டியது அவசியம்.

'தேர்தலில் நிற்க ஆள் உண்டா?' என்று ஆணவத்துடன் கேட்டனர்; 1962-ல் எல்லா இடங்களிலும் நிறுத்தப்பட்டு 50-பேர் வந்தோம்; படிப்படியாக அரசியலில் வெற்றிபெற்ருேம்!

'படுத்துக்கொண்டே ஜெயிப்போம்' என்று ஆணவமாகப் பேசிய காங்கிரசை 1967-ல் வீழ்த்தி, எதிர்க் கட்சியிலிருந்த நாம் ஆட்சிப் பொறுப்பேற்று, அவர்களை எதிர்க் கட்சியினராக ஆக்கினேம்!”

ஜப்பானிய மொழியில் தமிழ் இலக்கியம்

இந்தியர்—ஜப்பானியர் சேர்ந்து நடிக்கும் திரைப் படம்

கலாச்சார உறவு உறுதிப்படுவதற்கு முதலமைச்சர் அண்ணு யோசனை

சென்னை, சூலை 17—

“இந்தியாவுக்கும்— ஜப்பானுக்குமிடையே நெருங்கிய கலாச்சாரத் தொடர்பு ஏற்படவும், ஜப்பானைப்போல் தொழில் துறையிலும் வேளாண்மைத் துறையிலும் நாம் முன்னேறவும் முயற்சி செய்யவேண்டும்” என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் வற்புறுத்தினுர்கள்.

“தமிழ் இலக்கியங்களை ஜப்பான் மொழியிலும், ஜப்பானிய இலக்கியங்களைத் தமிழ் மொழியிலும் மொழி பெயர்த்து நூல்கள் வெளியிடப் படவேண்டும்” என்றும் கருத்துத் தெரிவித்தார்கள்.

அண்ணு அவர்கள் ஜப்பான் சென்று வந்ததையொட்டி சென்னை ஆபட்ஸ்பரிமாளிகையில், சென்னையில் உள்ள ஜப்பானியத் தூதுவரகத்தின் சார்பில ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அண்ணுவை வரவேற்றுச் சென்னையில் உள்ள ஜப்பானியத் தூதுவர் திரு. கிக்கேவா பேசுகையில்,

“அண்ணு சுற்றுப்பயணத்தால் இந்திய—ஜப்பானிய கலாசார உறவு பலப்பட்டிருக்கிறது”

என்று கூறினுர்.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்து அண்ணு அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“இந்தியாவுக்கும்—ஜப்பானுக்கும் இப்போது நல்ல நட்புறவு இருந்துவருகிறது. இங்கு அமைக்கப்பட்டிருக்கும் இந்தியா—ஜப்பான் கலாச்சாரக் கழகம், இந்த நட்புறவை மேலும் பலப்படுத்தும் என்று நம்புகிறேன்.

இந்தியா, ஜப்பானுடன் பலதுறைகளில் போட்டி போட முடியாமல் இருந்தபோதிலும், கலாச்சாரத் துறையைப் பொறுத்தவரையில், உலகத்துக்குப் பல வகையிலும் இந்தியா உதவியுள்ளது.

நான் இரண்டு தடவை ஜப்பானுக்குப் போய்வந்திருக்கிறேன்; இந்த இரண்டு சுற்றுப்பயணக் காலத்திற்குள் ஜப்பான் பல துறைகளில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது; குறிப்பாகத் தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும் பெரிய சாதனையே புரிந்திருக்கிறது.

பல எரிமலைகளுக்கும்—பூகம்பங்களுக்கும் இடையில், தேவையான மூலப் பொருள்கள் கிடைக்காமல் இருந்தபோதிலும் ஜப்பான் தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்துவருவது, உலகத்துக்கே பெரும் வியப்பாக இருக்கிறது. இன்னும் மூன்ருண்டுகளில் உலகத்திலேயே தொழில் வளத்தில் இரண்டாவது நாடாகத் திகழும் என்று நம்புகிறேன்.

ஜப்பானில் நான் பல விவசாயப் பண்ணைகளுக்குச் சென்று பார்த்தேன்; அங்குள்ள ஒரு விவசாயக் குடும்பத்தினருடன் நெருங்கிப் பழகினேன். இதிலிருந்து உலகததிலேயே விவசாயத்தில் சிறந்த நாடு ஜப்பான் என்பதைப் புரிந்துகொண்டேன்.

அமெரிக்காவிலே, விவசாயம் நல்ல முறையில் நடந்துவருகிறது என்ருலும், அங்கு பெரிய பண்ணைகள் வைத்து இயந்திரங்கள் மூலம் சாகுபடி செய்கிருர்கள்; ஆனல் ஜப்பானிலோ, நம் நாட்டைப் போலவே 2, 3 ஏக்கர் நிலங்களை வைத்துக்கொண்டுகூட விவசாயத்தில் பெரும் விளைச்சலைக் கண்டுவருகிருர்கள்.

அங்குள்ள விவசாயிக்கும்—நம நாட்டு விவசாயிக்கும் உள்ள ஒரே ஒரு வேறுபாடு என்னவென்ருல், நிலத்தை நம்பித் தங்கள் நிலத்திலேயே வீடுகள்

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தி வளர்ச்சிக்கு மட்டுமே முயற்சி

மற்ற மொழிகளுக்கு ஆதரவு கிடையாதாம்

திட்டவட்டமாக அறிவித்துவிட்டார் டெல்லி அமைச்சர்

அகமதாபாத் சூலை 17—

"நாட்டிலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களின் ஒருமித்த கருத்தினையும், எல்லாத் தரப்பு மக்களுடைய எண்ணங்களையும் அடிப்படையாகக் கொண்ட தேசியக் கல்விக் கொள்கை உடனடியாக அறிவிக்கப்படும்"

என்று மத்திய கல்வி அமைச்சர் டாக்டர் திரிகுண சென், கற்றறிவாளங்களிடையே பேசுகையில் குறிப்பிட்டார்.

“நாட்டிலுள்ள அனைத்து மொழிகளையும் வளர்க்க வேண்டும் என்பது அரசின் கொள்கையாக இருந்தாலும், இந்தி மொழியை மட்டும் வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது; மற்ற மாநில மொழிகளை வளர்க்க எத்தகைய ஆதரவும் இது வரையில் அளிக்கப்படவில்லை”

என்றும் மத்திய கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.

மணல்மேடு சமுதாயச் சீர்திருத்த மாநாட்டுத் தீர்மானங்கள்

சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் தமிழக அரசுக்குப் பாராட்டு

சமுதாய ஆக்கப்பணியில் அரசுடன் ஒத்துழைக்க வேண்டுகோள்

தாழ்த்தப்பட்டோர் அனைவருக்கும் இலவச மனைக்கட்டு வழங்க யோசனை

கடந்த 12-7-68 அன்று மாயூரம் வட்டம் மணல்மேட்டில் தோழர் ஏ,வி.பி. ஆசைத்தம்பி எம்எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற சமுதாயச் சீர்திருத்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :—

தமிழக அரசினரின் சமுதாய நலத் திட்ட ஆக்கப் பணிகளுக்கு அரசு ஊழியர்களும், பொதுமக்களும் ஒத்துழைப்பும் ஆதரவும் நல்கி, அவை வெற்றியடைய ஆவன செய்ய வேண்டுமென இம்மாநாடு அனைவரையும் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறது.

சீர்திருத்தவாதிகளின் நீண்டநாள் கோரிக்கையான சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லுபடியாககும் சட்டம் நிறைவேற்றியதற்காகத் தமிழக அரசை இம்மாநாடு பாராட்டுவதுடன், தமிழகப் பெருங்குடி மக்கள் அனைவரும் தங்கள் குடும்பங்களில் இத்தகைய திருமணங்களை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறது.

சாதி மத பேதமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கக் கலப்பு மணத் திட்டம் பெரிதும் உதவியாக இருக்கும் என்பதால், 'கலப்பு மணத் தம்பதிகளுக்குப் பதக்கம் வழங்கப்படும்' என்ற தமிழக அரசினரின் திட்டத்தை இந்த மாநாடு பாராட்டுவதுடன், அரசினரின் இத்திட்டத்துக்கு உறுதுணையாகத் தமிழக மக்கள் பெருவாரியாகக் கலப்பு மணத்தை மேற்கொள்ளுமாறு கேட்டுக கொள்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்ல முறையில் கல்விச் சலுகை வழங்கியுள்ள நமது தமிழக அரசினரை இம்மாநாடு போற்றுவதுடன், சமுதாயத்தில் சமநிலை ஏற்படும் வகையில் அவர்களை மேலும் எல்லாத் துறைகளிலும் மேம்படுத்துவதற்கான ஏனைய நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்ளுமாறு அரசினரைக் கேட்டுக் கொள்கிறது.

சிற்றூர்கள்தோறும் சமுதாய நல மன்றங்கள் உண்டாக்கி அவற்றைப் பொது மண்டபமாக உருவாக்க ஆவன செய்யுமாறு அரசினரைக் கேட்டுக கொள்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்களில் அனைவருமே சொந்தக் குடியிருப்பு மனை இல்லாதவர்களாதலால், அவர்கள் கேட்டால் மாத்திரம் வரிசைக்கிரமமாக மனை வழங்கும் முறையை மாற்றி, அனைவருக்குமே குடியிருப்பு மனையை இலவசமாக வழங்கவேண்டும் எனவும், இவற்றுக்குப் போதுமான நிலங்கள் அரசினர் வசம இல்லை என்றாலும் அறநிலையங்களுக்குச் சொந்தமான நிலங்களை இதற்குப் பயன்படுத்தலகை செய்யவேண்டும் எனவும் தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

உணவு விடுதிகள் போன்ற பொது இடங்களில் இன்னமும் சாதி வேறுபாடு பாராட்டப்படும் இழிசெயல் நிலவி வருவதால், அதனை அறவே நீக்கிட மேலும் தீவிர நடவடிக்கைகள் எடுக்குமாறு அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

மணல்மேடு வட்டாரத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் மிகுதியாக வாழ்வதால், இங்கு ஓர் தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதி அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தேவையான பாதை வசதி, குடிதண்ணீர், விளக்கு வசதி, மயானம் போன்ற இன்றியமையாத தேவைகள் சரிவர நிறைவேற்றப் படவில்லை என்ற குறைபாடு பரவலான முறையில் இருந்து வருவதால், அந்தத் துறைகளையும் தாழ்த்தப்பட்டோர் (அரிசன) நலத்துறையே மேற்கொண்டு, இன்னும் சிறப்பான முறையில் அவற்றைக் கவனிக்குமாறு தமிழக அரசினரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

மாயூரத்தில் சிறிய வாடகைக் கட்டிடத்தில் இருந்துவரும் தாழ்த்தப்பட்டோர் (அரிசன) மாணவர் விடுதியை மாணவியர் விடுதியைப்போல் அரசாங்கக் கட்டிடத்துக்கோ, அல்லது வேறு வசதியான வாடகைக் கட்டிடத்துக்கோ மாற்றுமாறு அரசினரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

நன்றியறிவிப்பு

"திருவான்மியூரிலிருந்து வடபழனிவரையில், 8-7-68-முதல் 12-ஜி எண்ணுள்ள பேருந்து புதிய தடம் ஏற்படுத்திப் பேருந்து விட்டமைக்காகப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை இயக்குநர் அவர்களுக்கும், பொதுமக்கள் சார்பிலும், திருவான்மியூர் தி. மு. க. சார்பிலும் மகிழ்ச்சியையும், நன்றியையும் உரிமையாக்குகிறேன்"

என்று திருவான்மியூர் தி. மு. க செயலாளர் ப. நாராயணன் அறிவிக்கிறார்.

ஆலந்தூர் நகர வார்டு கிளைகளின் மறு தேர்தல்

ஆலந்தூர் நகரத்தின் 13, 14, 17, 18 ஆகிய நான்கு வார்டுகள் உட்கிளைகளுக்கான தேர்தல்கள் 21-7-68 ஞாயிறு காலை 10-மணிக்கு தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தோழர் கே. கோவிந்தசாமி எம்.சி. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

இடங்களின் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

நெல்லை மாவட்ட தி. மு. க. கிளைகளின் மறு தேர்தல்

நெல்லை மாவட்டத்தின் கீழ்க்காணும் 12 கிளைகளிலிருந்து இரண்டிரண்டு தேர்தல் முடிவுகள் அனுப்பப்பட்டிருப்பதையொட்டி அந்தந்தக் கிளைகளின் மொத்த உறுப்பினர்களையும் முறைப்படி அறிவித்துக் கூட்டி, 21-7-68 காலை 10-மணிக்கு அந்தந்தக் கிளைகளின் தேர்தல்களை நெல்லை மாவட்டச் செயலாளரின் சார்பாக அனுப்பிவைக்கப்படும் ஆணையாளர்கள் நடத்திவைப்பர்.

நெல்லை வட்டம்

1. சுத்தமல்லி
2. நெல்லை நகர 3-வது வார்டு கிளை

கோவில்பட்டி வட்டம்

1. இலுப்பையூரணி

சங்கரன்கோவில் வட்டம்

1. வாசுதேவநல்லூர்

திருவைகுண்டம் வட்டம்

1. ஏரல்
2. அகரம்

தென்காசி வட்டம்

1. குற்றாலம்

நாங்குனேரி வட்டம்

1. சேவந்தியாபுரம்
2. தெற்கு விசயநாராயணம்
3. பிரியம்மாள்புரம்
4. ஆண்டான்குளம்

திருச்செந்தூர் வட்டம்

1. ஆத்தூர்

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

தஞ்சை உணவு உற்பத்தி பற்றி 'நியூயார்க் டைம்ஸ்'

முதல் பக்கத்தில் முக்கியத்துவச் செய்தி

முரசொலி மாறன் தகவல்--அமெரிக்காவிலிருந்து எழுதிய கடிதம்

சென்னை, சூலை 15—

அமெரிக்கா சென்றுள்ள முரசொலி மாறன் எம்.ஏ.,எம்.பி. அவர்கள், கேம்பிரிட்ஜ் நகரிலிருந்து பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. கருணாநிதி அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது :—

சூலை 2-ம் நாள் காலை நியூயார்க் வந்து சேர்ந்தேன்; பிறகு அங்கிருந்து அரைமணி நேரம் விமானத்தில் பயணம் செய்து போஸ்டன் வந்தடைந்தேன்.

போஸ்டன், மேசசூசெட்ஸ் மாநிலத்தின் தலைநகரம; இங்கிருந்துதான் எட்வர்ட் கென்னடி செனட்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இங்கு, சார்லஸ் என்று ஒரு பெரிய நதி ஓடுகிறது. ஆற்றுக்கு அக்கரையில் போஸ்டன்—இந்தப் பக்கம் ஹார்வர்டு பல்கலைக் கழகம் இருக்கும் கேம்ப்பிரிட்ஜ் நகரம்.

போஸ்டனில் திரு. சுந்தரத்தின் மகன் திரு. கிருஷ்ணன் பி.எச்டி. படித்துக்கொண்டிருக்கிறார்—விஞ்ஞானத் துறையில்; அவர் நாள்தோறும் என்னை வந்து பார்க்கிறார். அவருடைய வீட்டில் நமது பாணியில் சைவ உணவு கிடைக்கிறது.

இங்கு எல்லாம் இயந்திரம்தான்; காலையில் நாங்களே காகிதத்தாலான தட்டைத் தூக்கிக் கொண்டு செல்லவேண்டும். ஒரு காகிதக் குவளையை எடுத்து இயந்திரத்தின் அடியில் வைத்து பித்தானை அழுத்தினால் குவளை நிறைய பால் அல்லது பழச்சாறு கிடைக்கிறது.

காகிதத் தட்டு, காகிதக் குவளை போன்றவைகளைப் பயன்படுத்திவிட்டுத் தூக்கி எறிந்துவிடுகிறார்கள். நமது நாடு மாதிரி அவற்றைக் கழுவி அத்தனை அமெரிக்கர்களும் பயன்படுத்த ஆரம்பித்தால், பெரிய பொருளாதார மந்தம் ஏற்பட்டுவிடும் என்கிறார்கள்.

நேற்று கருத்தரங்கம் துவங்கியது. அமெரிக்காவிலுள்ள கட்சிகளின் நிலைமைபற்றி விவாதம்; மறுபடியும் மாணவ வாழ்க்கை; ஆனாலும் உற்சாகமாக இருக்கிறது. நிறைய படிக்க--விவாதிக்க முடிகிறது.

நானும், ஒரு ஜெர்மன் எம்.பி.-யும் ஓர் அறையில் தங்கி இருக்கிறோம்.

இங்கே 20 ஆயிரம் மாணவர்கள் பயிலுகிறார்கள். ஜான் கென்னடி இங்குதான் பயின்றார். அறிஞர் அண்ணா அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் படித்ததைப் பெருமையுடன் கூறுவதுபோல், இங்குள்ள மாணவர்கள் கென்னடி தங்கியிருந்த அறையைப் பெருமிதத்தோடு சுட்டிக் காட்டுகிறார்.

இங்குள்ள சராசரி மனிதன், உலகைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருக்கிறான்; காரணம் ஒவ்வொரு வீட்டிலும் டெலிவிஷன் இருப்பதுதான்!

படக்காட்சியின் மூலமாகவே செய்தி கிடைப்பதால், அனைவரும் உலகப் அறிந்தவர்களாக இருக்கிறார்கள்!

இங்குள்ள பத்திரிகைகளில் இந்தியச் செய்தி மிகவும் குறைவு; ஆனால் தஞ்சையில் உணவு உற்பத்தி பற்றியும், விவசாயத்தில் புரட்சி பற்றியும் 'நியூயார்க் டைம்ஸ்' ஏடு முதல் பக்கத்தில் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந்தது.

தென்காசியில் 23,000 வாக்கு வித்தியாசத்தில் கதிரவன் வெற்றி பெற்ற தந்தி வந்து சேர்ந்தது; மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

சாத்தூர் வட்டக் கிளைகளுக்கு :

"தலைமைக் கழகம் அனுப்பியிருக்கும் பட்டியலில் கண்டுள்ள பல கிளைகளின் முகவரிகளும், தேர்தல் முடிவுகளும் இன்னும் எனக்கு அறிவிக்கப்படாமலிருக்கின்றன; அவற்றின் அமைப்பாளர்களோ, செயலாளர்களோ விரைவில் ஆவன செய்து தெளிவாக எனது முகவரிக்கு அனுப்பி உதவ வேண்டுகிறேன்.

"எமக்கு அனுப்பப்பட்டுள்ள கிளைகளின் விபரங்களையும், தேர்தல் முடிவுகளையும், சிவகாசியிலுள்ள எனது கலைக்கூடத்தில் பார்வைக்கு வைத்திருக்கிறேன்; விவரம் அளிக்கப்படாத கிளைகளுடன் தொடர்பு கொள்வது எளிதல்ல என்பதையும் இதன்மூலம் கவனப்படுத்த விரும்புகிறேன்"

என்று சாத்தூர் வட்ட தி. மு. க செயலாளர் எஸ். பி. மணியம் அறிவிக்கிறார்.

வ. ஆ. மாவட்ட சேவூர் தி. மு. க. கிளை மறு தேர்தல்

ஏற்கனவே அறிவித்ததையொட்டி வ. ஆ. மாவட்டம் ஆரணி வட்டம் சேவூர் தி. மு. க. கிளையின் மறு தேர்தல், முறைப்படி 21-7-68 காலை 10-மணிக்கு ஆரணி வட்டச் செயலாளரால் அனுப்பப்படும் ஆணையாளரின் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

சிவகாசியில் தென்காசி வெற்றிவிழா

சிவகாசியில் 13—7—68 இரவு 7-மணிக்கு மாரியம்மன்கோவில் திடலில் நகர தி. மு. க. செயலாளர் துரைக்கண்ணன் தலைமையில் தென்காசி வெற்றி விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் எம். எஸ். தங்கமணி, க. மாரியப்பன், எஸ். எம். பொன்னுச்சாமி, கா. மு. மதார், அப்பை வரதராசன், வே. கருணாகரன், வெ. கண்ணன் ஆகியோர் பேசினர்.

தென்காசித் தொகுதி வெற்றி விழாவை முன்னிட்டு நகரில் பல இடங்களில் கழகக் கொடியைத் தோழர்கள் ஏற்றி வைத்தனர்; விவரம் :—

சிவகாமிபுரம் குடியிருப்பில், சாத்தூர் வட்டத் துணைச்செயலாளர் கோ. வரதராசன் கொடி ஏற்றி வைத்தார்.

அம்மன்கோவில்பட்டி பாலத்திற்கு முன்பு மாவட்டக் கழக உறுப்பினர் வே. கருணாகரன் கொடி ஏற்றி வைத்தார்.

மாரியம்மன்கோவில் முன்பும், அம்மன்கோவில் பட்டி நடுத் தெருவிலும் வெ. கண்ணன், கொடிகள் ஏற்றி வைத்தார்.

நகரில் பல இடங்களில் இனிப்புகள் வழங்கப்பட்டது.

கோவை நகர 4, 22-வது வார்டு உட்கிளைகள் தேர்தல்

கோவை நகர உட்கிளை (வார்டு கிளை)களின் தேர்தல்கள் சிலவற்றில் எழுப்பப்பட்ட ஆட்சேபனை – முறைமீடுகளை, ஆணையாளர் தோழர் நீல நாராயணன் அவர்கள் அறிக்கையின் அடிப்படையில் தலைமைக் கழகம் பரிசீலனை செய்து முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கேற்ப,

கோவை நகர 4-வது வார்டு உட்கிளையில் எல்லா பொறுப்புகளுக்குமான தேர்தல்களும்;

22-வது வார்டு கிளையின் அவைத் தலைவர் பொறுப்புக்கு ஆன தேர்தலும்;

21—7—68 ஞாயிறு காலை 10-மணிக்கு அந்த வார்டைச் சார்ந்த இடத்தில் நடைபெறும்.

தலைமைக் கழகச் சார்பில் பொதுக்குழு உறுப்பினர் கோ. செங்குட்டுவன் அவர்கள் ஆணையாளராக இருந்து தேர்தல்களை நடத்திவைப்பார்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

புளியம்பட்டி பஞ்சாலை வேலை துவக்கம்

கோபி வட்டத்தில் உள்ள புஞ்சைப் புளியம்பட்டி வி. ஆர். டெக்ஸ்டைல்ஸ் பஞ்சாலையில் 250-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபாற்றிவந்தனர். கடந்த சனவரி 13-ந் தேதியிலிருந்து எல்லாத் தொழிலாளர்களுக்கும் வேலை கொடுக்காமலே இருந்துவந்தனர். மீண்டும் தொடர்ந்து தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பதற்கு எப்பொழுதிருந்து ஆலையை இயக்குவது என்பது சம்பந்தமாகக் கலந்து பேச கோவைத் தொழிலாளர் அதிகாரி முன்னிலையில், 9—7—68 அன்று தொழிற்சங்கப் பிரதிநிதிகளும்—நிர்வாகப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இறுதியில், 15—7—68 முதல் ஆலையை இயக்குவது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் தொழிலாளர் அதிகாரியும், நிர்வாகத்தின் சார்பில் வரதராசனும், தேசியப் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் பி. எல். சுப்பையனும், கோவை மாவட்டத் திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் சார்பில் செயலாளர் பி. கருப்புசாமியும் கையொப்பமிட்டனர்.

நடக்க இருப்பவை

20—7—68

பழனி

அண்ணு மறுமலர்ச்சி மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு வைரவன் கோயில் திடலில்; தலைவர்: கே. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., பேசுவோர்: கே. எஸ். சந்தானம் எம்.சி., கோவை. க. இரத்தினம், மு. தமீம், மு. சிவானந்தம், டி. கே. எம். யூசப்.

குமாரி விஜயா குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

முகவரி:

புலவர் ஆ. பெரியசாமி,
தம்மம்பட்டி அஞ்சல்,
ஆத்தூர் வட்டம்,
சேலம் மாவட்டம்.

நலத்துறை அமைச்சர்

சாதிக் பாட்சா

சுற்றுப்பயணம்

ஜூலை 19 காலை 9-30 மணி: கீழமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு; 10-30 மணி: சிச்கபூவங்கி—ஊராட்சி அலுவலகத் திறப்பு; 11-30 மணி: ஆல்பட்டி—மேல்நிலை நீர்த் தொட்டித் திறப்பு; 12-30 மணி: பெல்லரப் பள்ளி—ஊராட்சி வரவேற்பு; பிற்பகல் 1-30 மணி: கள்ளக்குறிச்சி—கிராம மின்சாரத் திட்டத் துவக்க விழா; மாலை 4 மணி: கிருஷ்ணகிரி—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 5 மணி: கிருஷ்ணகிரி—வழக்கறிஞர்கள் சங்க வரவேற்பு; 6-30 மணி: சமால்பட்டி—ஆரம்ப சுகாதார நிலையத் திறப்பு; இரவு 7-30 மணி: ஊத்தங்கரை நிகழ்ச்சிகள்.

தமிழ் அன்னை பெருமிதம் அடைந்திடும் நிகழ்ச்சி!

பண்டைச் சிறப்பை மீண்டும் பெற்றது காஞ்சி!

நியாயமான காரியம் செய்த தமிழக அரசுக்கு நாவாரப் பாராட்டு

"ஊரெங்கும் கொடியும் தோரணமுமாகக் காட்சியளித்த காஞ்சிபுரம், புதிய வாழ்வு பெற்றதைக் கண்டு தமிழ் அன்னை அன்று பெருமிதம் அடைந்திருப்பாள்!

"மகத்தான காரியங்களைச் செய்த மண் அது! தெய்வ மணத்தோடு கலை வளர்த்த பூமி அது!

"ஒரு காலத்தில் உலக அறிஞர்கள் நாடிவந்த தலைநகரமாக இருந்த அது, இன்று மீண்டும் ஏற்றம் பெற்றுவிட்டது!

"இந்த நியாயமான காரியத்தைச் செய்த தமிழக அரசை, நிச்சயம் தமிழ் மக்கள் நாவாரப் பாராட்டுவார்கள்!"

இவ்வாறு 21—7—68-ம் நாளிட்ட 'ஆனந்தவிகடன்' இதழில், 'காஞ்சித் தலைநகர்' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள கட்டுரையில் விளக்கப்பட்டிருக்கிறது; அக்கட்டுரையில் கூறப்பட்டிருப்பதாவது:—

சென்ற ஆரும் தேதி சனிக்கிழமை அன்று—கோயில்கள் நிறைந்த காஞ்சிபுரம், திருவிழாக்கோலம் பூண்டு நின்றது.

மாலை நேரம் நெருங்க நெருங்க, பரபரப்பும் மகிழ்ச்சியும் இன்னும் அதிகமாயிற்று.

தேர்த் திருவிழாக் கூட்டம்போல் எங்கும் மகிழ்ச்சிதான்! 'நீண்ட நாட்களாகக் காத்திருந்த நிகழ்ச்சி நடக்கப் போகிறது' என்ற மகிழ்ச்சி அது!

சில புராணக் கதைகளுக்ுப் படம் போடுவார்களே—'தேவர்கள் வானத்தில் புகைமண்டலத்தில் நின்று பூலோகத்தைப் பார்ப்பதுபோல்—அதுபோன்று வானமும் கரும் புகையாக இருண்டது அன்று!

அந்தக் கறுத்த புகை நடுவில் பல்லவப் பேரரசர்களான மகேந்திர வர்மனும், நரசிம்ம வர்மனும் நின்று அவர்கள் காலத்திய தலைநகரம் விழாக்கோலம் பூண்டிருப்பதைக் கண்டுகளிப்பதுபோல ஒரு பிரமை!

ஆமாம்; 'நகரம் என்ருலேயே அது காஞ்சிதான்' என்ற பெருமை மிக்க வரலாறு படைத்த அந்த ஊர், மீண்டும் தலைநகரமாகிவிட்டது. செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகரமாகிய அது விரைவில் மாநகரமாகும்.

இந்தத் தலைநகர் மாற்றுவிழா, புதிய கலெக்டர் அலுவலகம் எதிரே இருந்த பிரும்மாண்டமான திடலில் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டிருக்க நடந்தது.

செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர் திரு. இலட்சுமிகாந்தன், பாரதி, உவகை பொங்க அனைவரையும் வரவேற்ருர்.

புதிய கலெக்டர் அலுவலகத்தைத் திறந்துவைத்து முதலில் பேசிய அமைச்சர் திரு. மதியழகன், காஞ்சிபுரத்தின் வரலாற்றுச் சிறப்புக்களை எடுத்துரைத்தார்; 'எனக்கு வழிகாட்டியாகவும், தமிழக முதலமைச்சராகவும் உள்ள அண்ணுவை அளித்தது இந்தக் காஞ்சியின் அண்மையப் பெருமை' என்று அவர் சொன்னபோது, ஒரே கைத்தட்டல்!

புதிய அலுவலகக் கட்டடங்களுக்கான அடிக்கல்லை நாட்டிப் பேசிய அமைச்சர் திரு. மு. கருணுநிதியும் இதையே கூறினுர்.

வானம் சறுத்து வருவதைக் குறிப்பிட்டு அவர், 'அண்ணுவின் பேச்சைக் கேட்க மழையும் வர இருப்பதால், நான் இததோடு அமருகிறேன்' என்ருர்.

நல்ல வேளையாக மழை வராததால், அன்று காஞ்சி மக்கள் ஓர் அருமையான சொற்பொழிவை—அந்த மண்ணில் பிறந்து எத்தனையோ சொற்பொழிவுகளை நிகழ்த்தியிருக்கும் முதலமைச்சரிடமிருந்து கேட்க முடிந்தது!

"நான் காஞ்சிபுரத்தில் பிறந்ததற்காக அதற்குப் பெரும் சிறப்புக்களைக் காரணமின்றிச் செய்வதாக யாரும் நினைக்கவேண்டாம்" என்று பேச்சைத் தொடங்கிய முதலமைச்சர், 'செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகர் அதற்கு வெளியே இருப்பது சரியல்ல' என்று முன்னுள முதலமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்துள்ள கருத்தைச் சுட்டிக்காட்டினுர்.

நிர்வாகம்—அதில் மக்களுடைய பங்கு இவற்றைப் பற்றி அன்று அவர் எடுத்துககாட்டிப் பேசியதும் அருமையாக அமைந்தது—

"பழைய காலத்தில், 'கலெக்டர் வருகிருர்' என்ருல், ஊர்ப் பெரியவர்களுக்கு உடல் நடுங்கும்; ஊரில் இருக்கும் கோழிகளில் எத்தனை போகப் போகிறதோ—ஆடுகள் எத்தனை போகப் போகிறதோ' என்று பயப்படுவார்கள்; இன்று காலம் மாறிவிட்டது"

என்று சொன்ன அண்ணு,

"இன்று கலெக்டர் முகாம் போடுகிருர் என்ருல், முகம் மலர வேண்டும்"

என்ருர்.

"நீங்கள், கலெக்டர் அலுவலகம்போன்ற பொதுத்துறை அலுவலகங்களுக்குப் பொதுக் காரியங்களை முன்னிட்டுப் போவதானுல், உரிமையுடன் தலைநிமிர்ந்து உள்ளே நுழையலாம்; ஆனுல், சொந்தக் காரியமானுல், தயங்கிக் கொண்டுதான்—தலைகுனிந்து கொண்டுதான் உள்ளே போக வேண்டும்; இதில் எந்த உரிமையையும் நீங்கள் எதிர்பார்ப்பதற்கில்லை"

என்ருர்.

இராணுவத் தலைமையின்கீழ் இராக்

இரத்தஞ் சிந்தாத புரட்சி

பெய்ரூத், ஜூலை 18—

ஒரு துளி இரத்தம்கூடச் சிந்தாமல் இராக் அரசு கவிழ்க்கப்பட்டுவிட்டது; அரசுப் பொறுப்பை இராணுவம் ஏற்றுக்கொண்டுவிட்டது; அதிபர் அப்துல்ரகிமான் அரீப் நாடு கடத்தப் பட்டுவிட்டார்; அவரது அதிகாரங்கள் பறிக்கப்பட்டுவிட்டன; அவருக்குப் 'பென்ஷன்' தரப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தலைமையமைச்சர் தகிர் பேட்கியாவின் அமைச்சரவையும் கலைக்கப்பட்டுவிட்டது; படைத்தளபதி இப்ரகீம் பெய்சல் அன்சாரியும் பதவியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார்.

அதிபர், படைத் தளபதி ஆகியோரின் பொறுப்புக்களைக் கவனித்துக்கொள்ள இராணுவத் தலைமைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

பொதுத் தேர்தல் நடைபெறும் வரையில் நிர்வாகத்தை நடத்தப் புதிய புரட்சிக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இராக்கின் புதிய அதிபராக மேஜர்-ஜெனரல் அகமது ஆசன் அல் பக்கர் என்பவர் புரட்சிக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்.

இராணுவத்தின் முக்கிய ஐந்து தலைவர்கள், அதிபர் அயூபின் சர்வாதிகாரத்தைக் கண்டித்துப் புரட்சி நடத்தியதன் விளைவுகள் இவை!

நாடு முழுவதிலும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

1958 ஜூலை 14-ம் நாளன்று இராக் முடியாட்சி கவிழ்க்கப்பட்டது; மன்னரும் மற்றும் பலரும் படுகொலை செய்யப்பட்டனர்.

அதற்குப்பின் இதுவரையில், 6 தலைமையமைச்சர்களும் 10 அமைச்சரவைகளும் பதவியில் இருந்திருக்கின்றனர்.

இராக்கின் எண்ணெய்வளத்தை அனைத்து நாடுகளின் ஏகபோகத்திற்கு விட்டுத்தராமல் செயல்படப் போவதாக இராணுவத் தலைமை உறுதியளித்திருக்கிறது.

"எந்த நிர்ப்பந்தங்களுக்கும் அல்லது மிரட்டல்களுக்கும் உட்படாத சுயேச்சை எண்ணெய்த் தொழிலை உருவாக்குவது இராக் தேசிய எண்ணெய் நிறுவனத்துக்கு இயலக் கூடியதாகச் செய்வோம். இராக்கின் தேசிய இயற்கை வளங்களை இராக்கியரே பயன்படுத்துவதற்கு வழி செய்வோம்"

என்று இராணுவத் தலைமை அறிவித்தது.

"எழுத்தறிவில்லாதவர்கள், சந்தர்ப்பவாதிகள், கொள்ளைக்காரர்கள், ஏகாதிபத்திய ஏஜெண்டுகள், யூத ஆதரவாளர் சந்தேகத்துக்குரியவர்கள், தன்னலக் கொள்ளை இலாபக்காரர்கள் இராணுவத்தை அலட்சியம் செய்தவர்கள் ஆகியோரின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்போம்"

என்று ஆட்சியை மேற்கொண்டவுடன் அறிவித்தனர்.

தமிழகச் சட்ட மன்றம்

ஆகஸ்டு 16-ல் கூடுகிறது

தமிழகச் சட்டமன்றக் கூட்டம் ஆகஸ்டு 16-ம் நாள் துவங்கும் எனத் தெரியவருகிறது.

10 நாட்கள் நடைபெறக் கூடுமென எதிர்பார்க்கப்படும் இக்கூட்டத் தொடரில், தமிழகத்துக்கு 'சென்னை இராஜ்யம்' என்றிருப்பதைத் 'தமிழ் நாடு' என மாற்றுவது சம்பந்தமாக மத்திய அரசு தயாரித்துள்ள மசோதாமீது விவாதம் நடைபெறும்.

மாநில ஆளுநர் பிறப்பித்துள்ள நான்கு அவசரச் சட்டங்களும் இக்கூட்டத் தொடரில் சட்டமாக்கப்படும்.

மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கைமீதும் இக்கூட்டத் தொடரில் விவாதம் நடைபெறும்.

சட்டமன்ற மேலவைக் கூட்டமும் ஆக. 16-ம் நாள் துவங்குகிறது; அதன் இக் கூட்டத்தொடரிலேயே துணைத் தலைவர் பதவிக்குத் தேர்தல் நடைபெறும்.

காஸ்மாபாலிடன் கிளப்வாசிகள் விவசாயிகளாவார்களா?

நிலத்தை நேரடியாகக் கண்காணித்து களத்திலே கணக்குப் பார்த்ததுண்டா?

சென்னை, ஜூலை 17—

"நான், ஜப்பான் சென்றிருந்தபோது, அங்கு ஒரு விவசாயக் குடும்பத்தினரோடு ஒரு நாள் தங்கியிருந்தேன்; காலையில் எழுந்ததும் அவர்கள், வயலைச் சுற்றி வந்து, பயிர்களைப் பராமரிப்பதைத் தங்கள் அன்ருடக் கடமையாகக் கருதுகிருர்கள்.

"ஆனுல் நமது நாட்டில், நிலத்தைத் தங்கள் வாழ்வுசகு—வளத்துக்கு ஒரு கருவியாகப் பயன்படுத்துகிருர்களே தவிர, வயல் பக்கமே போவதில்லை!

"'காஸ்மாபாலிடன் கிளப்பில் உட்கார்ந்து கொண்டு, கணக்கு முடிக்கிற விவசாயிகள் பலரை நான் பார்த்திருக்கிறேன்; இந்த ஆண்டு எவ்வளவு பணம்வந்தது? அடுத்த ஆண்டு எவ்வளவு வரும்?' என்று கணக்குப் பார்க்கிருர்களே தவிர, 'நிலம் என்ன ஆயிற்று' என்று கண்காணிக்கிற விவசாயிகள் நம் நாட்டில் அதிகம் இல்லை!

"உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ருல், விவசாயிகள் தங்கள் நிலத்தில் தாங்களே நேரடியாக அக்கறை கொள்ள வேண்டும்."

—முதலமைச்சர் அண்ணு
(ஜப்பான் தூதுவரக வரவேற்பில்)

ஜப்பானிய மொழியில்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அமைத்துக்கொண்டு, அந்த நிலத்திலேயே பாடுபடுகிருர்கள்.

தமிழ்நாட்டு விவசாயிகள், தமிழ்நாட்டில் உள்ள நிலச்சுவன்தார்கள், தங்கள் நிலத்தைக் குத்தகைக்கு விட்டுவிட்டு, அல்லது வேறு ஆட்கள் மூலமாக விவசாயத்தைக் கவனிக்கிருர்கள். இவர்கள், தங்கள் நிலத்தின் பக்கம்கூடப் போவது கிடையாது!

விவசாயத் துறையிலும், தொழில் துறையிலும் நாம் முன்னேற ஜப்பானிடமிருந்து பாடம் கற்க வேண்டும்; அவர்களைப்போல் முன்னேற வேண்டும்.

கலாச்சாரத்தைப் பொறுத்த வரையில், 'இந்தியாவுக்கும்—ஜப்பானுக்கும் கூட்டுத் தொடர்பு இருக்க வேண்டும்' என்று நான் விரும்புகிறேன்.

இந்தியா-ஜப்பான் கலாச்சாரங்களை இரண்டு நாட்டினரும் புரிந்துகொள்ள வசதியாக இந்தியா-ஜப்பான் நடிகர்களைக் கொண்டு இரண்டு நாடும் கூட்டாகச் சேர்ந்து திரைப் படம் தயாரிக்க வேண்டும்.

நாடகங்களைக்கூடத் தயாரிக்கலாம். இப்படித் தயாரிக்கப்படும் படங்கள், கலாச்சாரத்தைப் பரப்புவதற்குக் காரணமாக இருக்க வேண்டுமே தவிர, பணம் தேடுவதைக் குறிக்கோளாகக் கொள்ளக்கூடாது!

அத்துடன் ஜப்பான் தூதருக்கு நான் விடுக்கும் வேண்டுகோள் ஒன்றுண்டு; அது என்னவெனில், தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்களை ஜப்பான் மொழியிலும், ஜப்பானில் உள்ள இலக்கியங்களைத் தமிழ் மொழியிலும் கொண்டுவர முயற்சி செய்ய வேண்டும்.

இரண்டு நாடுகளுக்கும் இருக்கும் அரசியல் நட்பைவிட, கலாச்சார நட்பே உறுதியானது—நிரந்தரமானது."

வட்ட தி. மு. க. தேர்தல்

வேட்பாளர்

விண்ணப்பத் தாள்

வட்டக் கழகத் தேர்தலுக்கான வேட்பாளர் விண்ணப்பத் தாள்கள், அந்தந்த மாவட்ட—வட்டச்செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. தேவைப்படும் தோழர்கள் மாவட்ட—வட்டச் செயலாளர்களை அணுகிக் கேட்டுப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள். தலைமைக் கழகத்திற்கும் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

திருவல்லிக்கேணி சீரணித் தொண்டர்களுக்கு

சென்னை 75-வது வட்டத்தில் உள்ள திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் குளத்தைத் தூர்வாரும் வேலை சம்பந்தமாகத் திருவல்லிக்கேணி சீரணித் தொண்டர்கள்—வட்டச் சீரணி தலைவர்கள் ஆகியோர்கொண்ட ஆலோசனைக் கூட்டம், 19—7—68 இரவு 9 மணியளவில் தமிழகச் சீரணி அலுவலகத்தில் (பாலர் அரங்கம் அருகில்) நடைபெற இருப்பதால், திருவல்லிக்கேணிச் சீரணித் தொண்டர்கள் அனைவரும் தவருது கலந்துகொள்ளுமாறு திருவல்லிக்கேணி சீரணித் தலைவர் சி. ஆதிகேசவன் அறிவிக்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு எழுமிறி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.